26th April 1960]

**Sri K. VINAYAKAM**: திராவிட நாடு பாலிடெக்னிக் என்ற பெயரை வைத்தால் மற்ற ராஜ்யங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்கள் இங்கு சேர்ந்து படிக்க வசதி இல்லாமல் போய்விடும் என்றும், தமிழ் நாடு பாலிடெக்னிக் என்ற பெயரை வைத்தால் பக்கத்திலுள்ள ராஜ்ய மாணவர்கள் வந்து சேர்ந்து படிக்க வசதி ஏற்படும் என்ற சூழ் நிலையில் அரசாங்கம் அதன் பெயரை மாற்றி வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: ஒரு ஆராய்ச்சிக் குழு நியமித்து அதை எப்படி மாற்றுவது என்பதைப்பற்றி யோசிக்கப்படும்.

*Polytechnic for Girls*

* 822 *Q.*—**Sri A. VEDARATHNAM**: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் பெண்களுக்கென பாலிடெக்னிக் ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரமென்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**Sri A. VEDARATHNAM**: பெண்களுக்கு தொழில் கல்வி பயிற்சி அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறதா ? இப்பொழுதுள்ள தொழில் பயிற்சி பள்ளிகளில் பெண்கள் சேர்ந்து படிக்க வசதி செய்து கொடுக்கப்படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: பெண்களுக்கு தொழில் கல்வி பயிற்சி அவசியம்தான். அதனால் பாலிடெக்னிக்கில்தான் சேர்ந்து படிக்கவேண்டும் என்பது இல்லை. எந்த பாலிடெக்னிகில் வேண்டுமானாலும் அவர்கள் சேரலாம். இப்பொழுது அவர்களுக்குத் தான் சகல உரிமைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறதே. அதனால் அவர்கள் எதில் வேண்டுமானாலும் சேரலாம். பாலிடெக்னிக்கில் ஒருவரும் இது வரையிலும் வந்து சேரவில்லை.

*Government publications*

* 823 Q.—**Sri M. P. SARATHI**: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த அரசாங்கமே நடத்தும் மாத இதழ்கள், மாதமிருமுறை இதழ்கள், வார இதழ்கள் எவை எவை ?

(ஆ) சுமார் எவ்வளவு பிரதிகள் ?

(இ) அவைகளை வெளியிட ஆகும் செலவு என்ன ?

(ஈ) சந்தாவாக கிடைக்கும் தொகை எவ்வளவு ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: (*a*) *to* (*d*) The particulars are not readily available. A statement will be placed on the table of the House as soon as the particulars are gathered.

**Sri A. V. P. ASAITHAMBI**: அரசாங்கம் ஒவ்வொரு இலாகா செய்திகளை வெளியிடுவதில் பலவிதமான பத்திரிகைகள் செய்தி தாள்கள் மூலமாக வெளியிடப்படுகிறது. அப்படி வெளியிடுவதைவிட மாதம் ஒன்று அல்லது மாதம் இரு முறை என்கிற மாதிரி ஒரு இதழை அது அதிகப்படியான விலை வைத்தாலும் சரி, வெளியிட்டு அதில் எல்லா இலாகாவின் செய்திகளையும் வெளியிடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ? அப்படிச் செய்வதால் செலவு குறைவாக இருக்கும் அல்லவா? அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: கனம் அங்கத்தினர் அவர்களே பிரிதிகளை அதிக விலைக்கு விற்க வேண்டும் என்று சொல்லுகிறார். சிலருக்கு சில விஷயங்களில்தான் அக்கரை இருக்கும். அப்படி

எல்லாவற்றையும் ஒன்றாக பிரசுரித்தால் புத்தகம் பெரியதாக இருக்கும். அதனால் அநேகம் பேர்கள் அதை வாங்கமாட்டார்கள். அதனால் புத்தகங்கள் செலவு ஆகாது.

*Tax-evasion*

* 824 *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வரி கொடுக்காமல் ஏமாற்றுபவர்கள் விஷயமாய் நம் மாநில அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

(ஆ) மத்திய சர்க்கார் இவ் விஷயமாய் நியமித்த தியாகி கமிட்டி இதுபற்றி என்ன சிபாரிசு செய்திருக்கிறது ?

(இ) அரசாங்கம் அதை ஏற்று அமுல் நடத்துமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** (*a*) Yes, Sir, whenever a case of tax-evasion is brought to the notice of the authorities concerned, the appropriate remedy provided under the relevant taxing statute is taken. A statement showing the various measures taken by Government to prevent evasion of taxes is also placed cn the table of the House.

(*b*) The Tyagi Committee referred to by the hon. Member is the Direct Taxes Administration Enquiry Committee and its recommendations relate to Direct Taxes—mainly income-tax. A copy of the report of the committee published by the Central Board of Revenue, New Delhi, is placed in the Library of the Legislature.

(*c*) The recommendations of the Committee are under the examination of the Government of India and the question whether they can be usefully adopted in respect of the taxes levied by this State will be examined.

**Sri A. VEDARATHNAM :** இப்பொழுது மேஜையின் மீது வைக்கப்பட்டிருகிற ஏடு பத்து பக்கங்களுக்கு அதிகமாக இருக்கிறது. அதைப் படிக்க அவகாசம் இல்லை. அதனால் அதை படித்துவிட்டு வந்து உப கேள்விகள் கேட்பதற்கு நாளைக்கு ஒத்தி வைத்தால் உதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** சாதாரணமாக அப்படிப் பண்ணுவது இல்லை. அரை மணிக்கு முன்னதாகவே பதில்கள் மேஜையின் மீது வைக்கப்படுகிறது. அதனால் படித்துவிட்டு சப்ளிமெண்டரி கேள்விகள் கேட்கலாம். அதற்கு வேண்டிய அவகாசம் கொடுக்கப்படுகிறது. ஆகவே சப்ளிமெண்டரி கேள்விகள் கேட்கலாம்.

**Sri K. VINAYAKAM :** Mr. Speaker, Sir, even though we come here at 8-15 a.m., often the fans are not released and it is sufficiently hot inside the Chamber. Therefore it is almost impossible for the hon. Members to sit down here and assimilate the matter. It takes at least half-an-hour to understand the implications of the statement and frame relevant supplementaries. So may I suggest . . .

**Mr. SPEAKER :** Let the hon. Member confine to one thing at a time. First the hon. Member must have made representations to the Hon. the Leader of the House to have the session at Ootacamund. If it is hot here, I am not responsible for that. Second, the Assembly doors are opened at 8 O'clock in the morning and it is open to hon. Members to come and study the relevant facts and papers.

---

a Printed as Appendix II on pages 517–525 infra.